DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C. No. 20/2023 |
| Deposition of witness | : | PW – 7 |
| Name | : | ரவி |
| Father's /Husband Name | : | ரத்தினம் |
| Village | : | பொறையார் |
| Taluk | : | தரங்கம்பாடி |
| Age | : | 59 |
| Occupation | : | உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 12th day September 2024.
Accused absent petition U/sec. 317 Cr.P.C filed and allowed.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது பொறையார் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.07.2022ம் தேதி பேரளம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது திருவாரூர் அரசு மருத்துவமனையிலிருந்து வரப்பெற்ற தகவலைப் பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த முகம்மது இஸ்மாயில் மகன் அன்சாரி என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெவற்று வந்து அதற்கு நிலைய மனு எண்.299/2022 என கொடுத்து விசாரணைக்கு பின்பு பேரளம் காவல் நிலைய குற்ற எண்.349/2022 சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 506(1) இதச வின் படி கடந்த 16.07.2022–ல் வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் அறிக்கை **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு நான் இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 16.07.2022–ம் தேதி காலை 11.30 மணிக்கு இவ்வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் சேகர், பாபு ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பங்கள் பெற்றேன். (அந்த பார்வை மகசர் **அ.சா.ஆ. 5** மற்றும் மாதிரி வரைபடம் **அ.சா.ஆ. 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் பின்பு எனது விசாரணையில் சம்பவம் உண்மை எனத் தெரிய வந்ததால் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரியான செந்தில்குமார் என்பவரை தேடிவந்த நிலையில் கடந்த 16.07.2022–ம் தேதி பகல்

02.00 மணிக்கு பேரளம் பேருந்து நிலையம் அருகே நின்றுகொண்டிருந்தவரை அடையாளம் கூறி இவ்வழக்கின் காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்பு இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1க்கு சிகிச்சையளித்த மருத்துவர்கள் ஜமுனா, சதாம்உசேன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்று வந்தேன். மருத்துவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து சான்று பெற்ற வகையில் அ.சா.1–க்கு ஏற்பட்ட காயமானது கொடுங்காயம் என்று சான்று வழங்கப்பட்டதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவினை 294(பி), 323, 506(1) இதச விலிருந்து 294(பி), 325, 506(1) இதச வாக சட்டப்பிரிவு மாறுதல் செய்து அறிக்கை தாக்கல் செய்தேன். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இத்துடன் விசாரணை முடித்து எதிரி மீது குற்ற அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.